## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No. 33/2021

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வாசா.1 |
| பெயர் | : | கோபாலகிருஷ்ணன் |
| தகப்பனார் பெயர் | : | விவேகானந்தன் |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் செவ்வாய் 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது.

1. 16.01.2009 தேதிய 1வது இலக்கச் சொத்தும் அருணாசலம்பிள்ளை மனைவி பெயரிலிருந்து மகன்கள் மற்றும் மகள்களுக்கு கூட்டுப்பட்டா வழங்கி தேவகோட்டை மண்டல துணை வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு – அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 25.05.2013 தேதிய தாவா 2,3 இலக்கச் சொத்துக்கள் அருணாசலம்பிள்ளை மகன்கள் பெயரில் இருப்பதை காட்டும் நத்தம் நிலவரி தூய சிட்டா – உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 13.01.2021 தேதிய தாவா 4 வது இலக்கச் சொத்து சம்பந்தமாக பதிவுத் துறையிலிருந்து பெறப்பட்ட வில்லங்கச் சான்று – கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 03.06.2013 தேதிய தாவா 5 வது இலக்கச் சொத்துக்கு அருணாசலம்பிள்ளை மனைவி தங்கவேல் அம்மாள் பெயரில் நத்தம் பட்டா உள்ளதை காட்டும் நத்தம் நிலவரி தூய சிட்டா – உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 13.03.2021 தேதிய தாவா 6 வது இலக்கச் சொத்தின் 10(1) பிரிவு நில அளவை ஆவணம் – கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 02.03.2019 தேதிய தாவா 7 முதல் 11 இலக்கச் சொத்துக்களின் 10(1) பிரிவு நில அளவை ஆவணம் – கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.11 15:42:17 +0530